**In the Court of the Principal District Judge, Vellore District.**
**Deposition of Witness for P.W.2**
**SC.No.20/2019**

| | |
|---|---|
| **Name** | **: S.Amalraj** |
| **Father/Husband Name** | **: SELVARAJ** |
| **Village** | **:** |
| **Taluk** | **: VELLORE** |
| **Caste** | **:** |
| **Calling/Occupation** | **: S.I. of Police** |
| **Religion** | **: CHRISTIAN** |
| **Age** | **: 56** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 07.11.2022.**

**முதல் விசாரணை**

**நான் தற்போது வேலூர் காவல் பயிற்சி பள்ளியில் உதவி சட்ட போதகராக பணியாற்றி வருகிறேன். வேலூர் கிராமிய காவல் நிலையதில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி புரிந்தபோது கடந்த 23.05.2016ம் தேதி காலை சுமார் 9 மணிக்கு உதவி ஆய்வாளர் திரு மனோகரன் அவர்கள் தலைமையில் நானும் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு சௌளந்தர்ராஜன் உடன் மணல் கடத்தல் சம்மந்தமாக கண்காணிப்பு குழுவில் சென்றபோது பாலாத்து வண்ணான் ஆற்றிடம் சந்தேகத்திற்கு இடமாக வந்த டி என் 23 ஏ ஜே 1464 என்ற டிராக்டர் மற்றும் அதன் உடன் இணைந்த டிரெயிலர் டிஎண் 23 ஏ ஜே 1365 என்ற வாகனத்தை சந்தேகத்தின் பேரில் உதவி ஆய்வாளர் தணிக்கை செய்ய அதில் அரசின் எந்த வித அனுமதி இன்று கள்ளத்தனமாக சுமார் அரை யூனிட் ஆற்று மணலை கடத்தி வந்தது தெரிய வந்ததால் உதவி ஆய்வாளர் மேற்படி வாகனத்தின் ஓட்டுனரை விசாரிக்க அவரது பெயர் பாலாஜி, வயது 30 த/பெ நடராஜ், பாலாத்து வண்ணான் கிராமம் என்றும், மேலும் கள்ளத்தனமாக ஆற்று மணலை திருடி வந்ததை ஒப்புக் கொண்டதின் பேரில் உதவி ஆய்வாளர் மேற்படி பாலாஜி என்பவரை கைது செய்து அவரிடம் எவ்வித துன்புறுத்தலும் இன்றி ஒப்புதல் வாக்குமூலத்தை தனி நபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் போலிசார் எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னைக் கூட்டிச் சென்றால் ஆற்று மணல் திருடிய இடத்தை அடையாளம் காட்டுவதாக கூறினார். அந்த**

ஒப்புதல் வாக்குமூலத்தில் திரு.சௌந்தர் ராஜன் சிறப்பு உதவி ஆய்வாளர் மற்றும் நானும் கையொப்பம் செய்தோம். பின்னர் கடத்தலுக்கு பயன்படுத்திய டிராக்டர் மற்றும் டிரெய்லரையும் மணலையும் எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார். திரு.சௌந்தர் ராஜன் சிறப்பு உதவி ஆய்வாளர் மற்றும் நானும் கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகசர் ஏற்கெனவே அ.சா.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

வழக்கு சொத்து ஆஜர் செய்யப்படாததால் முதல் விசாரணை வேறு ஒரு ஒத்தி வைக்கப்படுகிறது.

N VASANTHALEELA

Digitally signed by N VASANTHALEELA
Date: 2022.11.07 16:34:30 +0530